17th March 1965]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : என்னுடைய கருத்தைத் தெரிவித்தேன். ராஜீநாமா செய்த இரண்டு மத்திய அரசாங்க அமைச்சர்கள் அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டியதில்லை, ஆட்சிமொழிச் சட்டத்தைத் திருத்தினுல் போதும், இந்தி பேசாத மாநிலங்களில் உள்ளவர்கள் வேண்டும்வரை ஆங்கிலத்தை வைத்துக்கொள்ளலாம் என்று சொன்னுர்கள். ஆட்சிமொழிச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்ற அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. ஏகோபித்த அபிப்பிராயம் இருந்தால் தான் நிறைவேறும் என்ற அடிப்படையில் இந்தி பேசாத மக்கள் விரும்புகிறவரையிலே ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டுமென்று நான் தெரிவித்த கருத்துக்கும் அதற்கும் வித்தியாசம் இல்லை என்று அவர்கள் சொன்னதை நான் ஏற்றுக்கொண்டு வற்புறுத்தினேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டுமென்று வற்புறுத்தினுர்களா ? அல்லது மொழிச் சட்டத்தைத் திருத்தினுல் போதும் என்று வற்புறுத்தினுர்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முதலில் நான் கூறியது நிரந்திரமாக இருமொழிக்கொள்கை அமுலில் இருக்கக்கூடிய அளவிற்கு அரசியல் சட்டத்தைத் திருத்தலாம் என்பது. தமிழ்நாட்டைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் அரசியல் சட்டத்தைத் திருத்துவதில் சில சங்கடங்கள் இருக்குமென்று தெரிவித்தார்கள். ஆகையினுல் ஆட்சிமொழிச் சட்டத்தைத் திருத்தினுல் போதும் என்று நினைத்து அந்தக் கருத்தைத்தான் தெரிவித்தேன்.

திரு. இராம அரங்கண்ணல் : ஜனவரி 26-ம் தேதிக்குப் பிறகு மத்திய அரசாங்கத்திலிருந்து எந்தெந்த இலாக்காவிற்கு இந்தியில் தகவல்கள் வந்தன. பதில் அனுப்பப்பட்டனவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சில கடிதங்கள் இந்தியில் வந்தன. இந்தியிலே மட்டும் வந்தது தவறு, ஆங்கிலத்திலும் வந்திருக்க வேண்டும் என்று மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டது.

திரு. ஆ. துரையரசன் : தலைவர் அவர்களே, அரசியல் சட்டத்தைத் திருத்துவதன் காரணமாக தமிழுக்கு ஆபத்து வந்துவிடும் என்று முதலமைச்சர் அவர்கள் பேசியதாக பத்திரிகைகளில் செய்திகள் வந்ததைப் பார்த்தேன். அது எந்த அடிப்படையில் கூறப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசியல் சட்டத்திலே சாப்டர் 17-ஐ எடுத்துவிட வேண்டுமென்று சொன்னுர்கள். சாப்டர் 17-ஐ எடுத்துவிட்டால் தமிழ்மொழியை ஆட்சிமொழியாக வைத்துக்கொள்வதற்குக்கூட பங்கம் வந்துவிடும் என்றுதான் அந்தக் கருத்தைத் தெரிவித்தேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, ஆட்சிமொழிச் சட்டத்தை திருத்தியதன் நகல் மத்திய அரசாங்கத்திலிருந்து மாநில அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டதாக பத்திரிகைகளிலே செய்தி வந்ததைப் பார்த்தேன். அப்படி வந்திருந்தால் இந்த மன்றத்தில் வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நானும் பத்திரிகையிலேதான் பார்த்தேன். இன்னும் அதைப்பற்றி எனக்கொன்றும் தகவல் வரவில்லை.

திரு. பி. கே. மூக்கையாத் தேவர் : முதலமைச்சர்கள் மாநாட்டிற்குப் போய் வந்த பிறகு ஆந்திரா முதலமைச்சர் பிரம்மானந்த ரெட்டி அவர்கள் தமிழ்நாட்டில் நிச்சயமாக இந்தி புகுத்தப்படும் என்று சொன்னுர்களே, அதன் விவரம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : திரு. பிரம்மானந்த ரெட்டி சொல்வதற்கெல்லாம் நான் பொறுப்பல்ல. யாரைப் பார்த்து எப்போது எதற்காகச் சொன்னார்கள், பத்திரிகையிலே என்ன வந்தது என்பதைப் பற்றியெல்லாம் ஆராயவேண்டிய அவசியம் இல்லை.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஹிந்தி பேசாத மாநிலங்கள் விரும்புகிற வரையில் ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சிமொழியாக இருக்கவேண்டும் என்று இப்போது முதல் அமைச்சர் வற்புறுத்தினதாகக் கூறுகிறார்கள். இதை என் முன்கூட்டியே சொல்வதற்கு இயலவில்லை? இவ்வளவு கலவரங்கள், இறப்புகள் நடந்த பிறகு இப்போது வந்த விவேகம் முதல் அமைச்சருக்கு அப்போது ஏன் வரவில்லை ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் கருத்து எதுவாக இருந்தாலும் எனக்கு எப்போதும் ஒரு விவேகம்தான். எப்போதும் எதிர்பார்த்ததுதான், எப்போதும் வற்புறுத்தியதுதான்.

திரு. கோ. சி. மணி : மௌண்ட் ரோடிலுள்ள காதி கிராம உத்யோக் பவனில், ஹிந்து 1965-ம் வருஷம் மார்ச் மாதம் 14-ந் தேதி வெளியான விளம்பரப்படி, அங்கு காலியுள்ள உத்தியோகங்களுக்கு ஹிந்தி படித்தவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. இது அமைச்சர் அவர்களுக்கு தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது பற்றி எனக்குத் தெரியாது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, மாநில முதல் அமைச்சர்கள் மாநாடு டெல்லியில் கூடியபோது, இந்த மாநில அரசின் சார்பில் முதல் அமைச்சர் அதில் கலந்து கொண்டார்கள். ஆனால், அந்த மாநாடு பற்றிய விளக்க அறிக்கையை இந்த மன்றத்தில் முதல் அமைச்சர் வைக்கவில்லை. அந்த அறிக்கையை இங்கு வைக்கும் எண்ணம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மாநில முதல் அமைச்சர் மாநாட்டைக் கூட்டியவர் பிரதம மந்திரி அவர்கள். அவர்கள் அது பற்றிய அறிக்கையை பார்லிமெண்டில் சமர்ப்பித்து இருக்கிறார். ஆக, அதை இங்கே வைக்க வேண்டிய நிமித்தம் இல்லை என்றுதான் இங்கே வைக்கவில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில் மொழிக் கொள்கை எவ்வாறு இருக்கிறது என்பதை அறியலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஏற்கெனவே இது இங்கே விவாதிக்கப்பட்டிருக்கிறது. மேலும், வருகிற ஏப்ரல் 1-ம் தேதி இதுபற்றி விரிவாக விவாதிப்பதற்குச் சந்தர்ப்பம் ஏற்படும்.

MR. SPEAKER : As we have allotted two days for discussing the Language issue at the end of the budget session, I think hon. Members need not put further supplementaries on this question. So, I pass on to the next qupestion.

தடை உத்தரவை மீறியது

*** 256 கேள்வி.—திரு. சா. கணேசன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குன்றக்குடி அடிகளார் என்னும் தெய்வசிகாமணி அருணசல தேசிக சுவாமிகள் 1965-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 12-ம் தேதி காலை சுமார் 10–30 மணிக்கு 144 தடையை மீறிக் குன்றக்குடியில் ஊர்வலம் வந்ததும், இந்தியை எதிர்த்துச் சொற்பொழிவாற்றியதும் அரசாங்கத் திற்குத் தெரியுமா ?